தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக் கிழமை, 1969 மார்ச் 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

*வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 226 முதல் 232 வரையில் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

கால்நடை மருத்துவ மனை

* 233 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைதுறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம், சூணம்பேடு ஆகிய இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவ மனைக்காகக் கட்டப்பட்டு முடிவுற்ற கட்டடங்களில் ஆறுமாதமாகியும் குடியேறுமல் வாடகை கட்டடங்களில் இன்னும் மருத்துவ மனை இயங்கி வருவதன் காரணம் என்ன ?

(இ) புதிய கட்டடங்கள் முடிக்கப்பட்ட பிறகும் மதுராந்தகம், சூணம்பேடு ஆகிய ஊர்களில் இயங்கி வரும் வாடகைக் கட்டடங்களுக்கு எவ்வளவு வாடகை தரப்பட்டிருக்கிறது ”

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) மதுராந்தகத்திலும் சூணம்பேட்டையிலும் கால்நடை மருந்தகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் அந்த மருந்தகம் உடனடியாக செயல்பட இயலவில்லை. ஏனென்ருல், மின்சார வழங்கல், நீர் வழங்கல் போன்ற முக்கிய வசதிகள் அங்கு செய்து கொடுக்கப்படவில்லை. மேலும், மாட்டடைப்பு (trevis) கட்டுதல், வேலி போடுதல் முதலிய வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, மதுராந்தகத்தில் உள்ள கட்டிடத்தில் 21—12—1967 அன்றும், சூணம்பேட்டையில் உள்ள கட்டிடத்தில் 5—4—1968 அன்றும் கால்நடை மருந்தகம் செயல்படத் தொடங்கியது.

(இ) மதுராந்தகத்திலுள்ள கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 120 வாடகை செலுத்தப்பட்டது. முக்கிய கட்டிடம் கட்டி முடிந்த தேதி முதல் மொத்தம் ரூ. 1,040 வாடகை செலுத்தப் பட்டது. சூணம்பேட்டையில் உள்ள கால்நடை மருந்தகத்தைப் பொறுத்த வரையில், சூணம்பேட்டையில் வாடகைக் கட்டிடத்தில் மையக் கிராம வளர்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக் கட்டிடத்துக்கெனத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 வாடகை செலுத்தப்படுகிறது. சூணம்பேட்டையிலுள்ள கால்நடை மருந்தகம் அதே கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, கால்நடை மருந்தகத்திற்காக வாடகை எதுவும் தனியே கொடுக்கப்படவில்லை.

Fixation of Procurement prices.

* 234 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the attention of the Government has been drawn to the views of the Deputy Chairman of the Planning Commission on the subject of fixation of procurement prices?

[1969 மார்ச் 8

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : ஆம். திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவரான டாக்டர் பி. ஆர். காட்கில் உற்பத்தியாளர்களிட மிருந்து கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்களுக்கு அதிக விலை கள் கொடுப்பதைத் திட்ட ஆணைக்குழு எதிர்க்கிறது என்றும், கொள்முதல் விலையை உயர்த்தினால் உணவு தானியங்களைப் பயன்படுத்துவோருக்கு அவை விற்கப்படும் விலை அதற்கேற்ப உயருமென்பதே இதற்குக் காரணம் என்றும் 1967-ம் ஆண்டு அக்டோபரில் கூறினார். இவ்வரசாங்கம் இக் கூற்றினைத் தன் கருத்தில் கொண்டுள்ளது.

* 235 வின—**திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர், திரு. கே. வினயகம் :** மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினவிற்கு விடையளிப்பாரா :—

உணவு தானியங்களுக்கு குறிப்பாக நெல்லுக்கு இப்பொழுது நிர்ண யிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை எப்பொழுது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : விவரமான ஓர் அறிக்கை a அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தமிழக அரசு மேற்கொண்டிருக்கிற கொள் முதல் விலையையும், உற்பத்தித் திறனையும் பார்த்து மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் பாராட்டியதைச் சில காங்கிரஸ்காரர்கள் கண்டிக்கிறார்களே அதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நன்றாகத் தெரியும். தமிழகத் திலே நிர்ணயித்திருக்கிற விலை நியாயமான விலை என்று அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே உற்பத்தியாளர்களுடைய நிலையையும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலையையும் கவனிக்க வேண்டும். வாங்கிச் சாப்பிடு கிறவர்களின் எண்ணிக்கை உற்பத்தியாளர்களினுடைய எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த விலை சரிதான் என்று அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது சொன்னார்கள்.

திரு கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையிலே சிறந்த ரக நெல் குவிண்டால் ரூ. 48 என்றும், நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45 என்றும், மட்ட ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 என்றும் தரப்பட் டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அது விவசாயிகளுக்கு கட்டுபடி ஆகாது. ஆகையால் மத்திய அரசாங்கத்திடம் சொல்லி அதிக மான விலையை நிர்ணயித்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன்றைய நிலையில் கொடுக்கப் பட்டிருக்கிற விலை நியாயமான விலை என்று மத்திய அரசானது மாநில அரசுக்குச் சொல்லியிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, நெல் விலையை உயர்த்த வேண்டு மென்று தஞ்சை உற்பத்தியாளர் சங்கத்திலிருந்து அரசாங்கத்திடம் தூது வந்தார்களா ? அப்படியென்றால் அவர்களுக்கு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சையிலிருந்து உற்பத்தி யாளர் சங்கத்தின் தூதுக்குழு வந்தது. அவர்கள் மாத்திரம் அல்ல, சட்டமன்றத்திலே இருந்து அனைத்துக் கட்சி நண்பர்களும் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். தஞ்சையிலே மாத்திரம் என்று சொல்ல முடியாது மற்றவர்களும் கேட்கிறார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையை யொட்டித் தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : சாதாரணமாக கொள்முதல் நெல்லுக்கு அதிக விலை கொடுப்பது நிலப்பிரபுக்களுக்கு கொடுப்பதாகத்தான் முடி யும். அப்படிக் கொடுப்பதும் நிலப்பிரபுக்களுக்காக வாதிடுவது ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

---

a 668–670-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.